# வேலை வெற்றிடம்

## கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மேல் மாகாணம்)

கீழுள்ள பதவிகளுக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்)** | **- பதவி 01 (நிரந்தரமானது)** |
| **உதவிப் பணிப்பாளர் (பொறியியல்)** | **- பதவி 01 (நிரந்தரமானது)** |
| **சிரேஷ்ட அபிவிருத்தி அதிகாரி** | **- பதவி 01 (நிரந்தரமானது)** |
| **அபிவிருத்தி அதிகாரி** | **- பதவி 03 (நிரந்தரமானது)** |
| **பிரத்தியேக உதவியாளர்** | **- பதவி 02 (ஒப்பந்தம்)** |
| **ஓட்டுநர்** | **- பதவி 02 (நிரந்தரமானது)** |

**பதவி :- பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) - உள்ளக நபர்களுக்கு மாத்திரம் - பதவி 01**

**சம்பள அளவு** :- 91,690-10x2480-15x3450-168,240-MM 1-1

**கல்வித் தகைமை** :- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியல்/ விஞ்ஞானம்/ சுற்றாடல்/ விவசாயம்/ சுற்றாடல் மற்றும் வனவியல் விஞ்ஞானம் தொடர்பில் விசேட பட்டம் மற்றும் பொறியியல்/ விஞ்ஞானம்/ விவசாயம்/ சுற்றுச்சூழல் விஞ்ஞானம் தொடர்பில் பட்டப்பின்படிப்பு பட்டத்துடன் முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் அரச சேவை, மாகாண அரச சேவை, அரச சார்பு சேவை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு குறையாத நிறைவேற்றுத் தரத்தில் அனுபவம்.

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விஞ்ஞான துறை தொடர்பில் சாதாரண பட்டம் மற்றும் விஞ்ஞான துறை தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்பின் படிப்பு கற்கையை கற்றிருத்தல் மற்றும் முதல் பட்டத்தைப் பெற்ற பின் அரச சேவையில் மாகாண அரச சேவையில், அரச சார்பு சேவையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறித்த துறையில் 11 ஆண்டுகளுக்கு குறையாத நிறைவேற்றுநர் தரத்தில் அனுபவம்.

கழிவு/ சுற்றுச்சூழல் முகாமைத்துவம் அல்லது குறித்த துறை தொடர்பில் அறிவு மற்றும் மாகாண சபை துறை தொடர்பில் அறிவு மேலதிக தகைமையாக கருதப்படும்.

**பதவி :- உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) சிவில் - நிரந்தர அடிப்படையில் - பதவி 01**

**சம்பள அளவு** :- 91,690-10x2480-15x3450-168,240-MM 1-1

**கல்வித் தகைமை** :- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியல் விஞ்ஞானம் (சிவில்) தொடர்பில் பட்டத்துடன் 02 ஆண்டுகள் குறித்த துறையின் அனுபவம்

**பதவி** :- சிரேஷ்ட அபிவிருத்தி அதிகாரி - நிரந்தர அடிப்படை - பதவி 01

**அளவு** :- 70,010-10x1360-18x2040-124,330 JM 1-2

**கல்வித் தகைமை :- வெளி ஆட்சேர்ப்பு**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியல்/ விஞ்ஞானம்/ புவியியல் விஞ்ஞானம்/ சமூக விஞ்ஞானம்/ விவசாய விஞ்ஞானம் தொடர்பில் விசேட பட்டம் ஒன்றுடன் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் 02 ஆண்டுகள் அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சாதாரண பட்டம் ஒன்றுடன் 02 ஆண்டுகள் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் அனுபவத்துடன் 03 ஆண்டுகள் அரச, அரச சார்பு, மாகாண அரச அல்லது தனியார் துறையில் அனுபவம்.

**உள்ளக ஆட்சேர்ப்பு**

மேல் மாகாண சபை கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் அபிவிருத்தி அதிகாரி பதவியின் II ஆம் தரத்தில் 03 ஆண்டுகள் சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள II ஆவது செயல்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள்.

**பதவி :- அபிவிருத்தி அதிகாரி - நிரந்தர அடிப்படை - பதவி 03**

**அளவு** :- 58,740-10x1190-15x1360-11x1670-109,410 MA 5-1

**கல்வித் தகைமை :- உள்ளக/ வெளி**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் புவியியல் விஞ்ஞானம்/ சமூக விஞ்ஞானம்/ விவசாய விஞ்ஞானம்/ சுற்றாடல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம்.

**பதவி** :- பிரத்தியேக உதவியாளர் - ஒப்பந்த அடிப்படை - பதவி 02

**சம்பள அளவு** :- 50540-10x540-7x630-4x1080-20x1280-90270

**கல்வித் தகைமை :- வெளி ஆட்சேர்ப்பு** :- பட்டய செயலாளர் நிறுவனத்தின் டிப்ளோமாவுடன் 02 ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக ஆட்சேர்ப்பு** :- க.பொ.த. (சா.த.) கணிதம்/ சிங்களம் மற்றும் ஆங்கிலம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் மற்றும் க.பொ.த. (உ.த.) 03 பாடங்கள் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 06 ஆண்டுகள் அனுபவம்.

**பதவி: ஓட்டுநர் :- நிரந்தர அடிப்படை - பதவி 02**

**சம்பள அளவு** :- 43,880-10x490-10x540-10x590-12x630-67,040

**கல்வித் தகைமை** :- வெளி ஆட்சேர்ப்பு

க.பொ.த. (சா.த.) 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி மற்றும் சிறந்த இயந்திர அறிவு, செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் (மூலம் 32இற்கு குறையாத) ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின் அரச, மாகாண அரச சார்பு அல்லது தனியார் துறையில் 06 ஆண்டுகள் அனுபவம் மற்றும் கண்கள் நன்கு தெரிந்திருத்தல்.

**வயது வரம்பு -**

18 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உச்ச வயது வரம்பு உள்ளக விண்ணப்பதாரர்கள் அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையின் விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது.

**வேறு விடயங்கள்:-**

இணைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் அடிப்படைச் சம்பளத்தின் 10% ஊழியர் சேமலாப நிதியத்திற்காக அவரினால் செலுத்த வேண்டும் என்பதோடு 15% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் அதிகாரசபையினால் ஏற்கப்படும்.

இணைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நிறுவனக் கோவை, மேல் மாகாண நிதி ஒழுங்குமுறை, மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு கட்டளைகள், இலங்கை அரசினால் அல்லது மேல் மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள அல்லது அவ்வப்போது விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கீழ்படிதல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:-** கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையினால் அழைக்கப்படும் நேர்முகப்பரீட்சைக் குழு ஒன்றின் முன்னிலையில் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும். தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதித்துக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, விண்ணப்பம் கிடைத்திருப்பதாக அல்லது நிராகரிக்கப்பட்டிருப்பதாக அறியத்தரப்படும். (மேல் மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும்)

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :-** தமது விபரங்களை உள்ளடக்கி நீங்கள் தயாரித்த விண்ணப்பத்தை 2026.01.19 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், தலைவர், கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா), தும்போவில, கரதியான, பிலியந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

தற்போது அரச/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தை தமது சேவை தலைவர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு நேர்முகப் பரீட்சைக்கு பங்கேற்பதற்காக எந்த ஒரு கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது. மேலும் எந்த வகையிலும் நேர்முகப்பரீட்சைக் குழுவுக்கு அழுத்தம் கொடுப்பது அந்தப் பதவியை பெறுவதற்கு தகுதியற்றதாகக் கருதப்படும்.

**தலைவர்,**
**கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை,**
**மேல் மாகாணம்.**

**தொ.பே. இலக்கம் - 011-3056703 / 011-2613151** **2026.01.02**